
# கடற்கரைக் கவியரங்கு! - 593 (நாள்: 06-09-2020)



பொங்கிடும் அழகோ! புதுப்புனல் வடிவோ!
தங்குத் தடையின்றி தமிழை வளர்க்கும்,
எங்களின் மன்றம் என்நாளும் வாழிய!
வங்கக் கடலை வருடும் காற்றுடன்,

பொங்கும் அலையுடன் வள்ளுவன் பின்புலம்;
மங்காப் புகழுடன் வளரும் மன்றம்,
சிங்கமகன் **பொன்னடி**யின் சீரிய அறிவால்,
தங்கத் தமிழன் **பாரதிதாசன்** முனைப்பால்,



திங்கள் தோறும் தொடர்ந்து நடத்தி,
அங்கமாய் இன்று **ஐம்பதாம்** ஆண்டில்!
வங்கக் கடலையது; பொங்கிடும் போதும்,
தங்குத் தடைகளைத் தகர்த்தே வளரும்!

அங்கமாய் என்றும் நிறையும் **வான்முகில்**!
பொங்கும் காற்றில் புதுவரி கூட்டத்
திங்கள் தோறும் சிலரும் சேர்வர்!
சங்கை முழங்கியச் சரித்திரமாக,

இங்கே இன்று நிரைப்பவர் **அய்யாச்சாமி!**
பங்கமின்றிப் பறந்துவரவே பலநாள் யானும்,
சிங்கமாய் நினைந்துப் புறப்படும் காலை,
அங்கமாய்ச் சிலவேலை அடுத்து வந்திடும்!

இங்கோ இன்று இயன்நிலை வாழ்வைத்,
தங்கும் நுண்ணுயிர் தடை செய்தாலும்,
எங்கள் இல்லம் இயன்நிலைக் கூட்டி,
தங்குதடையின்றி இணைய வைத்ததே!



- கவிவளவன் ஆகிய கு.ப. அசோகன்.



06-09-2020